# சேர்ந்து பாடுவோம் வாருங்கள்

"பாடு குயிலைப் போல் பாடு

ஆடு மயிலைப் போல் ஆடு"

ஆட்டமும் பாட்டமும் குழந்தைகளின் மொழிகள். இவர்கள் பாடிக் களிக்க இவர்களுடன் பாடிக் களிக்க '**சென்னை யூத் காயர்**' - ஐச் சார்ந்த பாடகர்கள் பள்ளிக்கு வர இருக்கிறார்கள். நாளை முதல் (ஜூலை 15 முதல் ஜூலை 17வரை) மூன்று நாட்கள் பள்ளி முழுவதும் பல குயில்களின் குரலிசை ஒலிக்கக் காத்திருக்கிறது. நாளை முதல் இரண்டு நாட்களுக்கு சென்னை யூத் காயர் பாடகர்கள் பலவிதப் பாடல்களைக் கற்றுத் தர இருக்கிறார்கள். எங்கள் பள்ளியின் சமூக நலத் திட்டப் பணிகளின் ஓர் அங்கமாக இந்நிகழ்ச்சியில் எங்கள் பள்ளிக் குழந்தைகளுடன் எமது பள்ளிக்கு அருகாமையில் உள்ள 5 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 25 குழந்தைகளும் இணைந்து பாட இருக்கிறார்கள். ஜூலை 17 ஞாயிறு காலை 10,00 மணிக்கு இந்த இளங்குயில்களுடன் சென்னை குழுப்பாடகர்களும் இணைந்து உங்களுக்காக கான மழை பொழியக் காத்திருக்கிறார்கள். உங்களின் காலைப் பொழுது கானப்பொழுதாக மாற வேண்டாமா!!!